**விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2019**

---

1.1 **அபிப்பிராயம்**

விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால்

செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான

கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் பாடநெறிக் கட்டணங்களை கணக்கீடு செய்வதற்குரிய சரியான கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங் காணப்படாதிருந்ததுடன் அதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | நடப்பாண்டிற்குரிய பாடநெறி வருமானம், முன்னராக கிடைத்த வருமானம் மற்றும் அட்டுறு வருமானம் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பாடநெறிக் கட்டணங்கள் தொடர்பாக சரியான கணக்கீட்டுக் கொள்கையொன்று ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் தவணைப் பணம் அறவிடப்படாத உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 112,988 பெறுமதியான இடர்கடன் மீதி மற்றம் கணனி கடன் மீதி என்பன நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தருக்குரிய இக் கடன் மீதியை சேமலாப நிதியத்திலிருந்து விடுவிப்ப தற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்ட ரூபா 50,338,160 தொகையை அறவிடுவதின் போக்கு நிச்சயமற்ற நிலைமையில் இருக்கும் போது நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததால் நிறுவகத்தின் சொத்துக்கள் சரியாக நிரூபணமாகவில்லையென்பது அவதானிக்கப்பட்டது. | நிதி முறைகேட்டிற்குரிய இப்பணத்தை அறவிடுவதற்க இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இத்தொகை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது | ஒழுக்காற்று நடவடிக்கை துரிதமாக்கப்பட்டு அதன் பிரகாரம் கணக்குகளில் மேற்கொள்ள வேண்டிய சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிறுவகம் மீளாய்வாண்டில் ஆராய்ச்சி மானியம் பெறுகை ரூபா 138,594 மற்றும் ரூபா 140,717 ஆன ஆராய்ச்சி மானியம் கொடுப்பனவுகள் குறைத்த காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டன. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட வேறுபாடுகளுடன் இனங்குகின்றோம். எவ்வாறாயினும் பொருண்மையற்ற பெறுமதியான விடயமொன்றென சுட்டிக் காண்பிக்க விரும்புகின்றேன். | பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் சரியாக நிதிக்கூற்றுக்களில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் 05 மாதங்கள் முதல் 08 ஆண்டு காலம் கடந்த ரூபா 98,962 ஆன வாகன வாடகை வருமானத்தை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொகையில் ரூபா 45,172 ஐ மாணவர் களிடமிருந்து அறவிடப்படும் Bench Fee இலிருந்து அறவிடுவதற்கும் எஞ்சிய பணத்தை எதிர்காலத்தில் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்த கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணமான ரூபா 15,428,800 தொகையில் மீளாய்வாண்டில் எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | கல்விசாரா பதவியணியினரின் வேலை நிறுத்தம் உட்பட தவிர்க்க முடியாத காரணங்களால் இப்பாடநெறிக் கட்டணங்களை அறவிட முடியாமல் இருந்ததுடன் எதிர்காலத்தில் துரிதமாக அறவடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை பாடநெறிக் கட்டண மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 யூலை 30 ஆந் திகதிய 4/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக | நிலையான வைப்பு பதிவேடு சுற்றறிக்கைக்கு இணங்க பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான வைப்பு பதிவேடு சுற்றறிக்கைக்கு இணங்க தயாரிப்பதற்கு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வு சுற்றறிக்கை கடிதத்தின் (iii) ஆம் பிரிவு | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட நிதிச் சுற்றறிக்கையின் 4/2019 (v) ஆம் பிரிவு | நிறுவகம 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை 33 நிலையான வைப்புக்கள் பேணிச்செல்லப்பட்டு வந்ததுடன் இவ்வைப்புக்கள் முதிர்வடைந்தவுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரி நலன்கள் கூடிய நிறுவனத்தில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான வைப்புக்கள் முதிர்வு அடையும் போது அரச வங்கிகளிலிருந்து கூறுவிலை கோரி முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 40,804,151 மிகையாக இருந்ததுடன், அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 76,889,677 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 36,085,526 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிச்கு தனிப்பட்ட சம்பளங்கள் செலவினம் ரூபா 11,017,794 ஆல் அதிகரித்தமை மற்றும் அன்னியச் செலாவணி விகித வேறுபாடு ரூபா 26,036,314 குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 ஆண்டுகளின் நிதி விளைவுகளை மீளாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற் கொண்ட போது 2015 ஆம் ஆண்டில் ரூபா 96,051,739 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 134,781,277 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக சுத்திகரிக்கும் ஒப்பந்தத்தை வழங்குவதற்காக திறந்த விலை கோரும் போது முறையாக கருத்திற் கொள்ளாமலும் கவனம் செலுத்தாமலும் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இரண்டு சந்தர்ப்பங்களில் பத்திரிகை விளம்பரத்தை மேற்கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 49,335 தொகை சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. | முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் போது எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் மூன்று கட்டிடத்திற்கு ஒரே தடவையில் கூறு விலைகோரிய போதும் புதிய கட்டிடத்தை திறந்து வைப்பதற்கு தாமதமானமையால் இந்நிலைமை ஏற்பட்டதுடன் இது எதிர்பாராத விடயமொன்றாகும். | பெறுகை செயற்பாடுகள் முறையான கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்திற்கு சொந்தமான 4 வாகனங்களின் எரிபொருள் எரிவினை பரீட்சிப்பதற்காக மீளாய்வாண்டில் இலங்கை போக்குவரத்து சபைக்கு ரூபா 10,000 கொடுப்பனவு செய்து பரீட்சிக்கப்பட்டிருந்த போதும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையில் சாரதிகளால் அப்பரிசோதனையில் அங்கீகரிக்கப்பட்ட விகிதத்தை விட வேறொரு விகிதமொன்றின் கீழ் நாளந்த ஓட்டக் குறிப்புக்ளில் எரிபொருள் எரிவு குறிப்பிடப்பட்டிருந்தது. | குறித்த விலகல்களை சரியாக்குவதற்கு சாரதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைளுடன் இணங்க வேண்டும் |
| (ஆ) | நிறுவகம் 2018 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்விற்காக களஞ்சியப் பொறுப்பாளர் உட்பட 06 உத்தியோகத்தர்கள் கணிப்பீட்டு சபையாக பரிசோதனை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் பொருட் பதிவேடுகளின் பிரகாரம் கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்க் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் இவ்வாண்டு முதல் குறித்த திகதியில் சமப்படுத்தல் பதிவுகளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருள் மெய்மையாய்வு மற்றும் கணிப்பீட்டு சபை நியமனம் நிதிப் பிரமாணத்திற்கு இணங்க மேற் கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2015 ஏப்ரல் 09 ஆந் திகதிய 914 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பதவியணியின் ஒழுக்காற்று கல்வி பொறுப்பு தொடர்பான வழிகாட்டல் கோவையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் பதவியணியினர் மற்றும் மாணவர்களுக்கு இடையே இருதரப்பு தொடர்பினை வெளிப்படுத்துவதற்கு அல்லது அதன் மூலம் தரக் கட்டுப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய நிலைமகளை தவிர்ப்பது தொடர்பாக போதியளவு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்ற தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களாலும் விரிவுரையாளர்களாலும் நிரப்பப்பட வேண்டிய 02 படிவங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய வழிகாட்டல்களுக்கு இணங்க வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2015 திசெம்பர் மாதத்தின் போது விநியோகிக்கப்பட்ட இலங்கை | எமது நிறுவகத்திற்கு முழுநேர விரிவுரையாளர்கள் இரண்டு பேர் மாத்திரம் இருப்பதால் | உரிய வழிகாட்டல்களுக்கு இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் பட்டப்படிப்பு பாடநெறிகளை மீளாய்வு செய்வது தொடர்பான கைநூலின் 7 ஆவது நியதியின் பிரகாரம் விடைப்பத்திரங்களை மதிப்பீடு செய்வதற்காக விடைப்பத்திரங்களை இரண்டாவது தடவை சரி பிழை பார்க்கும் உள்ளக ரீதியாக அறிமுகப்படுத்த வேண்டியதுடன் அது பேரவையாலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விடைபத்திர மதிப்பீடு செய்தல் சிக்கலாக இருப்பதுடன் அதற்காக எமது நிறவகத்திற்கு வசதிகள் வழங்கப்பட வேண்டும். | |
| (உ) | நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகள், திட்டமிடல், வினாப்பத்திரங்களை தயாரித்தல், அவற்றை மேம்படுத்துதல், சரி பிழை பார்த்தல், தரப்படுத்தல் மற்றும் மீளாய்வு செய்தல் தொடர்பாக பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் மற்றும் நியமங்கள் என்பவற்றை தயாரித்து பேரவையினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அந்நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | பெறுபேறுகளை வெளியிடும் செயற்பாடு மிகவும் சரியாகவும் விசுவாசமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்து பாடநெறிகளுக்காகவும் மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் பெறுபேறுகளை தரப்படுத்தல், மீளாய்வு செய்தல் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப் படுகின்றன. எவ்வாறாயினும் தேவையான கடிதங்கள், ஆவணங்கள் என்பவற்றை நிறுவகத்திற்கு கீழ் கையேற்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்போம். | உரிய வழிகாட்டல்களுக்கு துரிதமாக இணங்க வேண்டும். |
| (ஊ) | நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகளுக்குரியதாக நடாத்தப்படும் விடைத்தாள் மதிப்பீட்டிற்காக புள்ளியிடல் நடைமுறையொன்று (Marking scheme)தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புள்ளியிடல் நடைமுறை மற்றும் விடைத்தாள்கள் என்பன விடைத்தாள் பரிசோதகரின் பொறுப்பில் இருப்பதால் அவற்றை விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய வழிகாட்டல்களுக்கு துரிதமாக இணங்க வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 11 பட்டப்பின் பாடநெறிகளுக்காக 139 வெளிவாரி விரிவுரையாளர்களுக்காக ரூபா 18,519,579 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அவ்விரிவுரையாளர்களின் சேவை முறையாக பெற்றுக் கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக மாணவர்களிடமிருந்து மதிப்பீட்டு நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அந்தந்த விரிவுரையாளர்களின் சேவை தொடர்பாக மாணவர்களிடமிருந்து முறையான நடைமுறையொன்று ஊடாக பெற்றுக்கொண்டு நிறுவகத்தில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையை மதிப்பீடு செய்யும் நடைமுறையொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்குரிய விடைப்பத்திரங்களை மதிப்பிடுவதற்காக மதிப்பீட்டுக் குழுவொன்று (Exam Evaluation Panel) நியமிப்பதற்கும் பரீட்சிக்கப்பட்ட விடைப்பத்திரங்களை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவது தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்க வில்லை. | விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்குரிய 11 விடைப்பத்திர மதிப்பீட்டுக் குழுக்கள் (Exam Evaluation Panel) நியமனம் செய்யப்பட்டுள்ளன. விடைத்தாள்கள் அந்தந்த விரிவுரையாளர்களிடம் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த போதும் எதிர்காலத்தில் அனைத்து விடைப்பத்திரங்களையும் இந்நிறுவகத்திலேயே பாதுகாப்பாக களஞ்சியப்படுததி வைப்பதற்கு நடைமுறையொன்ற தயாரிக்கப்பட்டுள்ளது. | விடைப்பத்திரங்களை களஞ்சியப்படுத்துவது தொடர்பாக நடைமுறையொன்று விரைவில் தயாரிக்கப்பட வேண்டும். டுள்ளது. |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் போது ஆராய்ச்சி மானியங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 562,027 பெறுமதியான 23 | ஆராய்ச்சி மானியங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்கள் எம்மால் வேறாக பொருளிருப்பு | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் முறையாக பொருளிர்பு பதிவேட்டில் உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பொருளிருப்பு பதிவேட்டின் பிரதியொன்று இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். | |
| (ஈ) | 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 20 பாதுகாப்பு கெமறாக்களை ஸ்தாபிப்பதற்கு ரூபா 813,649 செலவிடப்பட்டிருந்த போதும் இத்தரவுகளின் களஞ்சியப்படுத்தக்கூடிய காலஎல்லை 21 நாட்களுக்கு குறைவான காலமாக இருந்தது. | எதிர்காலத்தில் Hard Disk Capacity ஐ அதிகரித்து களஞ்சிய தரவுகளை களஞ்சியப்படுத்தக்கூடிய நாட்களை 90 வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | பெறுகையின் போது செயற்திறனாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (உ) | நிறுவகத்தினால் 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குறுங்கால பாடநெறிகள் / செயலமர்வுகள் தொடர்பாக தெரிவு பரிசோதனையின் போது 03 பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 640,000 ஆன நிலுவை பாடநெறிக் கட்டணங்களை அறவிடாமல் அப்பாடநெறிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. | பாடநெறிகளுக்குரிய ரூபா 640,000 தொகையை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். | பாடநெறிகள் தொடர்பாக முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ஒரு வங்கியில் 24 நிலையான வைப்புக்கள் பேணிச்செல்லப்படுவதுடன் நிறுவனத்தின் தேவைப்பாட்டிற்கு ஈடாகும் வகையில் வைப்புச் சான்றிதழ்களின் அளவினைகக் குறைந்த நிதி முறைகேடுகள் இடம்பெறுவதை குறைப்பது தொடர்பில் முகாமைத்துவும் கவனம் செலுத்த வேண்டும். | குறித்த விடயங்கள் தொடர்பாக நடவடிக்களை எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். | நிறுவகத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் ஒரு வங்கியில் 24 பேணிச்செல்லப்படும் நிலையான வைப்புக்கள் அளவினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 நிதிய முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் எவ்வித கொடுக்கல் வாங்கலொன்றும் மேற்கொள்ளப் படாதிருந்த 03 ஆராய்ச்சி கணக்குகளுக்குரிய ஆண்டின் இறுதியிலான மீதி ரூபா 227,714 ஆக இருந்ததுடன் ஆராய்ச்சி செயற்பாடுகளை பூர்த்தி செய்த மீதிகளை தீர்வு செய்வதற்கு அல்லது ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி செயற்பாடுகளின் மீதிகளை முடியுமான தீர்வுசெய்வதற்கு அங்கீகாரம் பெற்றதன் பின்னர் ஆராய்ச்சி நிதியத்திற்கு மாற்ற எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | நிதியத்தை இயலுமான வரை பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் ஆராய்ச்சி மற்றும் புலமைப் பரிசில் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதியத்திலிருந்து மீளாய்வாண்டில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் ஆண்டின் இறுதி வரையிலும் நிதியத்தில் ரூபா 8,038,458 ஆன மீதியொன்று காணப்பட்டது. | இப்பணத்தை பயன்படுத்துவதற்கு உரிய செயற்பாடுகள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | நிதியத்தை இயலுமான வரை பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை நிறுவகத்திற்கு 04 வாகனங்கள் இணைக்கப்பட்டிருந்த போதும் ஒரு சாரதி மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததால் நிறுவகத்திற்கு சொந்தமான 03 வாகனங்கள் எப்போதும் குறைப்பயன்பாட்டு நிலைமையில் காணப்பட்டதால் நாளாந்த செயற்பாடுகளுக்கு அதிகளவில் தடையொன்று உருவாகியிருந்தது. | நிறுவகத்தின் பதவியணியினரை நாளதுவரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டு வருகின்றது. | வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவிகள் தொடர்பாக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 11 பதவிகளில் 15 உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்களும் 03 பதவிகளில் 07 உத்தியோகத்தர்கள் மிகையாகவும் காணப்பட்டனர். நிறுவகத்தில் காணப்படும் வெற்றிடமான பதவிகளை விரைவில் நிரப்புவதற்கும் தேவைப்பாட்டின் பிரகார மிகை பதவிகளுக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் அல்லது அந்த உத்தியோகத்தர்களை ஏனைய நிறுவனங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு, பதவியணி அங்கீகரிக்கப்பட்டு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமொன்று கடந்திருந்த போதும் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | நிறுவகத்தின் காணப்படும் பதவியணியினரை நாளது வரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளப்படும். | வெற்றிடங்கள் மிகை பதவிகள் தொடர்பில் விரைவில் எடுக்கப்பட வேண்டும் |